அசல் வழக்கு எண். 244/2018 தேதி 02-02-2024

வா.சா.1- ரவிசந்திரன்

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா பி அட்டவணை பாதை 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு நடுவில் செல்கிறது என்றால் சரிதான். பி அட்டவனை பாதையின் அகலம் 20 அடி ஆகும். பி அட்டவனை பாதையில் 1ம் பிரதிவாதிக்கு உரிமை உள்ளது. மேற்படி பாதையில் ஆறுமுகம், 1ம் பிரதிவாதி செல்வராஜ், தாயம்மாள், பெரியசாமி ஆகியோர்களுக்கும் உரிமை உள்ளது. 1ம் பிரதிவாதியின் தந்தை பொம்மா நாயக்கர் கிரையம் பெற்ற போது மேற்படி கிரைய ஆவணத்தின் தாவா பி அட்டவனை பாதையில் உரிமை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும். தாவா பி அட்டவனை பாதை வழியாக ஏ அட்டவனை சொத்திற்கு நான் சென்றுவருவதை 1ம் பிரதிவாதி தடை செய்யவில்லை. மேற்படி பாதையில் எனக்கு உரிமை இல்லை என 1ம் பிரதிவாதி கூறவில்லை. 1ம் பிரதிவாதி சொத்திற்கு செல்வதற்கு தாவா பி அட்டவனை பாதை வழியாக தான் செல்ல வேண்டும். 1ம் பிரதிவாதிக்கு எதிராக எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல

**2, 3, 5 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது தந்தை ராஜலிங்கம் 12.07.2018ம் தேதி இறந்தார். எனது தந்தையின் தகப்பனார் பெயர் வைரப்பெருமாள். தாவா சொத்து கடவூர் வட்டம், மஞ்சநாயக்கன்பட்டியில் உள்ளது. தாவா ஏ அட்டவனை சொத்தின் சர்வே எண்77. அதன் விஸ்திரணம் 7 ஏக்கர் 13 செண்ட் ஆகும். மேற்படி இடம் என் பெற்றோர் பெயரில் உள்ளது. மாணிக்கம் மற்றும் மலைகொழுந்து ஆகியோர் என் உடன் பிறந்தோர்கள். என் சதோரர்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. கூட்டு குடும்பமாக நாங்கள் இருப்பதால் சகோதரர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.282/2013 வழக்கு நடைபெற்றது. மேற்படி வழக்கை என் தகப்பனார் வாதியாக இருந்து தாக்கல் செய்தார். அப்போது என் தந்தைக்கு 80 வயது இருக்கும்.

2. மேற்படி வழக்கை நான் மேற்பார்வை செய்து வந்தேன். அசல் வழக்கு எண். 282/2013 மற்றும் தாவா வழக்கில் சொத்துக்கள் விவரம் ஒன்று தான். பிராது வரைபடம் வா.சா.ஆ-6 மற்றும் அசல் வழக்கு எண்.282/2013 ல் தாக்கல் செய்துள்ள வரைபடமும் ஒன்று தான். மேற்படி வழக்கில் செல்வராஜ், ஆறுமுகம், பழனிசாமி மற்றும் முத்துசாமி ஆகியோர் பிரதிவாதிகள். முத்துசாமி இறந்துவிட்டார். அவரது வாரிசுகளான 4 முதல் 10 பிரதிவாதிகள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன். வா.சா.ஆ-6 வரைபடத்தில் நத்தம்பட்டி - மாணிக்கபுரம் ரோடு தெற்கிலிருந்து வடக்காக செல்வதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி ரோடு தாவா ஏ அட்டவனை சொத்திற்கு செல்லவில்லை. செல்வராஜ் நிலத்திற்கு வடபுறம் ஆறுமுகம் நிலமும், அதற்கு வடபுறம் பழனிசாமி நிலமும், அதற்கு வடபுறம் கண்ணதாசன் நிலமும் உள்ளது.

3. வா.சா.ஆ. 6 வரைபடத்தில் 4 ம் பிரதிவாதி இடம் என குறிப்பிடப்பட்டுள்ள இடம் முத்துசாமிக்கு பாத்தியப்பட்டதாகும். வா.சா.ஆ.6 வரைபடத்தில் வாதி எனது நிலம் என காட்டப்பட்டுள்ள இடத்திற்கு சர்வே எண் குறிப்பிடவில்லை. அது போல் தாவா பாதை என குறிப்பிட்டுள்ள இடத்திற்கு சர்வே எண் மற்றும் அளவுகள் குறிப்பிடவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்களில் 20 அடி பாதை என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் மேற்கு புறத்தில் தென்வடலாக தென்புறம் பாதை புறம்போக்கிலிருந்து வடக்கு முகமாக நடந்து கொள்ள பாதை பாத்தியம் உரிமை மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், 20 அடி வண்டிப்பாதை என குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ-2 கிரைய பத்திரத்தில் மாமூல் பாதை உட்பட மேற்படி சொத்தில் தென்கோடியில் உள்ள நடைபாதை நீங்கலாக உள்ள சொத்தை கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், 20 அடி பாதை என்றும், வண்டிப்பாதை என்றும், குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிரைய பத்திரத்தில் மாமூல் வழிநடை பாதை பாத்தியம் என மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், 20 அடி பாதை என்றும், வண்டிப்பாதை என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-4 கிரைய பத்திரத்தில் கோணம்பட்டி ரோட்டில் ஆரம்பித்து நேர் வடக்காக பொம்மா நாயக்கர் என்கிற கணக்கப்பிள்ளை நாயக்கர், அய்யம்மாள், வீரமலை, காளியப்பன் ஆகியோர் நிலத்தில் மேல்கோடியில் செல்லும் மாமூல் பொது பாதையில்

தாங்களும், வண்டி வாகனம், ஆடு மாடுகள் ஓட்டி செல்லவும், நடந்து செல்லவும் பாத்தியம் உட்பட என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 கிரைய பத்திரம் என் தந்தையால் கிரையம் பெற்றுள்ளதால் எங்களுக்கு ஆதரவாக பாதை விவரத்தை குறிப்பிட்டு எழுதியுள்ளோம் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ-4 ஆவணத்தில் 20 அடி பாதை உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 13.11.2018 ம் தேதி அசல் வழக்கு எண்.282/2013 வழக்கை மேல் நடத்தாமல் திரும்ப பெற்றுக்கொண்டோம். அசல் வழக்கு எண்.282/2013 வழக்கை திரும்ப பெறுவதற்கு என் தந்தை தாக்கல் செய்த குறிப்பாணை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ-1**. அசல் வழக்கு எண்.282/2013 ன் பிராது சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2**. அசல் வழக்கு எண்.282/2013 ன் எதிர்வழக்குரை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3**. மேற்படி வழக்கில் இடைக்கால உத்தரவு பெற்றுக்கொண்டு பாதையை விஸ்தரிப்பு செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டார்.

(2, 3, 5 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 141/2021

வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி திருமதி.ஆர்.ஞானசேகரன் பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 02-02-2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கபூர் | கிராமம் | |
| த/பெ | | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | |

**வா.சா. 2 முதல் விசாரணை**

| | | |
|---|---|---|
| 1. | எனது ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு | **வா.சா.ஆ.6** |

(பிராதின்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Principal District Munsif,**
**Kulithalai.**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண்

வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி திருமதி.ஆர்.ஞானசேகரன் பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 02-02-2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கபூர் | கிராமம் | |
| த/பெ | | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | |

**<u>வா.சா. 2 முதல் விசாரணை</u>**

| | | |
|---|---|---|
| 1. | எனது ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு | **வா.சா.ஆ.1** |
| 2 | | **வா.சா.ஆ 2** |
| 3 | | **வா.சா.ஆ 3** |
| 4 | | **வா.சா.ஆ 4** |
| 5 | | **வா.சா.ஆ 5** |
| 6 | | **வா.சா.ஆ 6** |
| 7 | | **வா.சா.ஆ 7** |
| 8 | | **வா.சா.ஆ 8** |
| 9 | | **வா.சா.ஆ 9** |
| 10 | | **வா.சா.ஆ 10** |
| 11 | | **வா.சா.ஆ 11** |
| 12 | | **வா.சா.ஆ 12** |
| 13 | | **வா.சா.ஆ 13** |
| 14 | | **வா.சா.ஆ 14** |

(பிராதின்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Principal District Munsif,**
**Kulithalai.**

அசல் வழக்கு எண். 113/2014 தேதி 02-02-2024

பி.வா.சா.4 - மகேஷ்வரி

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு எழுத படிக்க தெரியாது. வாதி கோரியுள்ள பரிகாரம் பற்றி தெரியும். வழக்கின் சொத்தின் சர்வே எண் தெரியாது. தாவா சொத்தின் விஸ்திரணம் ஏக்கர் 9.40 செண்ட் ஆகும். மேற்படி ஏக்கர் 9.40 செண்ட் சர்வே எண்.1777 /2 மற்றும் 1777/3 ஏ ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து சர்வே எண்.1777/7 ல் கட்டுப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.1777/7 ல் உள்ள சொத்திற்கு நிலஉடமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பு பொன்னம்பலம் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரியல்ல. பொன்னம்பலம் என்பவரின் தாயார் மாணிக்கம் என்றால் சரிதான். மாணிக்கம் பெயரில் பட்டா இருந்த விவரம் எனக்கு தெரியும். மாணிக்கத்திடமிருந்து என் சகோதரர் பழனிசாமி 37 செண்ட் இடத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

2. சர்வே எண்.1777/7 ன் மொத்த விஸ்திரணம் 47 செண்ட் என்றால் சரிதான். மாணிக்கம் கல்லறை உள்ள 10 செண்ட் இடத்தை நீக்கிவிட்டு மீதமுள்ள இடத்தை என் சகோதரர் பழனிசாமிக்கு கிரையம் கொடுத்தனர். கிரையம் வாங்கிய பின்னர் 37 செண்டை அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே அனுபவித்து வருகிறோம். கிரையத்திற்கு முன்பாக மேற்படி சொத்தை அனுபவம் செய்ததற்கு ஆவணங்கள் உள்ளது. மேற்படி 10 செண்டில் 1 செண்ட் இடத்தில் மாணிக்கத்தின் சமாதி உள்ளது. மேற்படி சமாதி நீங்கலாக உள்ள 9 செண்ட் இடத்தை வாதி பாக்கியம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். வாதி மற்றும் என் சகோதரர் கிரைய பத்திரங்களை நான் படித்து பார்த்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் சரியாக தான் இருந்தது என்றால் சரியாக தான் இருந்தது.

3. என் சகோதரர் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.226/2014 வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதில் நான் தரப்பினர் இல்லை. அவ்வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. என் சகோதரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியும். வாதி மற்றும் பிரதிவாதிகள் மாணிக்கம் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற பின்னர் மேற்படி சொத்து உட்பிரிவு

செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும். வாதி இடத்தில் போர்வெல் உள்ளது என்றால் சரியல்ல. என் தம்பி இடத்தில் உள்ளது. மேற்படி போரிவெல்லிருந்து என் தம்பி தண்ணீர் எடுத்து வருகிறார். மேற்படி போர்வெல் உள்ள உட்பிரிவு எனக்கு தெரியாது. போர்வெல்லிற்கான மின் இணைப்பு என் தம்பி பெயரில் உள்ளது.

4. மின் இணைப்பு வாங்கினார் என்று நியாபகம் இல்லை. நாங்கள் கிரையம் பெற்ற பின்னர் மேற்படி போர்வெல் போட்டோம். மேற்படி சொத்தை உட்பிரிவு செய்வதற்காக அளவீடு செய்ததை நான் பார்த்தேன். சுமார் 20 வருடத்திற்குள்ளாக மேற்படி சொத்தை அளவீடு செய்தனர். தேதி நினைவில்லை. என் சகோதரர் சர்வே எண்.1777/7 ல் உள்ள 37 செண்ட் இடத்தை மட்டும் கிரையம் பெற்று கொண்டு வாதி கிரையம் பெற்ற 9 செண்ட் இடத்தில் உள்ள வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகளுக்கு தெரிந்து தான் வாதி கிரையம் பெற்றார் என்றும், இரு தரப்பும் சேர்ந்து தான் உட்பிரிவு செய்தனர் என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தை சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்ய பிரதிவாதிக்கு ஆதரவாக நான் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. என் சகோரருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Principal District Munsif,**
**Kulithalai.**

அசல் வழக்கு எண். 22/2020 தேதி 02-02-2024

வா.சா.1- வடிவேல்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. பிரதிவாதி ராமலிங்கம் எனது உறவினர் இல்லை. எனது இடத்தில் பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியதால் தாவா வழக்கு தாக்கல் செய்தேன். தாவா சொத்தின் சர்வே எண்.706/9 ல் 52 சதுர மீட்டரும் மற்றும் சர்வே எண்.706/10 ல் 37 சதுர மீட்டரும் ஆகும். சர்வே எண்.706/9 ல் உள்ள 52 சதுர மீட்டரில் நீளம் சுமார் 30 அடியும், அகலம் 22 அடியும் இருக்கும். சர்வே எண்.706/10 ல் உள்ள 37 சதுர மீட்டரில் அகலம் 23 அடியும், நீளமும் 25 அடியும் இருக்கும். மேற்படி சொத்து நான் கிரையம் பெற்றதாகும். மேற்படி சொத்தின் மூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மூலபத்திரம் கிடையாது. நத்தம் நிலம் என்பதால் அதற்கான பட்டா தாக்கல் செய்யவில்லை. பட்டா எண்.132 மற்றம் 1040 ஆகியவற்றை பார்த்து சொத்தை வாங்கினேன்.

2. பட்டா எண்.1040 தற்போது என் பெயரில் பட்டா எண்.132 ல் உள்ளது. மேற்படி பட்டா எண்.1040 இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். என் முதல் விசாரணையில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விவரத்தில் பட்டா எண்.1040 தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் கிரைய பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை. வங்கியில் அடமானம் வைத்துள்ளேன். 3 மாதங்களுக்கு முன்பு அசல் கிரைய பத்திரத்தை திரும்ப பெற்றுவிட்டேன். 21.12.2023 ம் தேதி எனது முதல் விசாரணை தாக்கல் செய்தேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் அசல் கிரைய பத்திரம் வங்கியில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். என் கைவசம் உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது வழக்கறிஞரிடம் ஆவணங்கள் கொடுத்த போது அசல் கிரைய பத்திரம் என் கைவசம் இல்லை. வழக்கறிஞரிடம் ஆவணங்கள் கொடுத்த தேதி நியாபகம் இல்லை.

3. எனது முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்த தேதியும், அசல் கிரைய பத்திரத்தை என் கைவசம் வைத்து கொண்டு வேண்டுமென்றே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அசல் கிரைய பத்திரம் எந்த வங்கியில் என்ன கடனுக்காக அடமானம் வைத்தேன் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்

சரிதான். தாவா சொத்துக்கள் இன்றைய தேதியில் யார் பெயரில் உள்ளது என்றால் எனது நண்பர் கோபாலகிருஷ்ணன் என்பவரிடம் பெற்ற கடனுக்காக கிரையம் கொடுத்துள்ளேன். நவம்பர் மாதம் 2023ம் வருடத்தில் தாவா சொத்துக்களை கிரையம் கொடுத்துவிட்டேன். தாவா சொத்துக்களை நான் கிரையம் கொடுத்த விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Additional District Munsif,**
**Kulithalai.**

அசல் வழக்கு எண். 203/2017 தேதி 02-02-2024

பி.வா.சா.1- பெருமாள்

<u>வாதி கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 1ம் பி ரதிவாதி அழகர் எனது அண்ணன். 3ம் பிரதிவாதி ராசம்மாள் எனது தாயார். வாதி கருப்பசாமி யார் என்று எனக்கு தெரியாது. தாவா சர்வே எண். 1354/12 ற்கு வாதி கருப்பசாமி பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண் 1354/12 ற்கு எனது பாட்டா மலையகவுண்டர் பெயரில் பட்டா இருந்தது. தற்போது எங்கள் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா இல்லை. மலையகவுண்டருக்கு சிறும்பாயி மனைவி என்ற விவரம் எனக்கு தெரியும். சிறும்பாயி எனது அப்பாயி. நான் 1993ம் வருடம் பிறந்தேன். மலையகவுண்டர் சிறும்பாயியை எந்த வருடம் திருமணம் செய்து கொண்டார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. அப்போது நான் பிறக்கவில்லை. வாதி கருப்பசாமியின் தாயார் அழகம்மாள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. அழகம்மாள் தாயார் பழனியம்மாள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பழனியம்மாள் எனது அப்பாயி சிறும்பாயின் சகோதரி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மலையகவுண்டருக்கு பழனியம்மாள் தான் மனைவி என்றும், அவர்களுக்கு அழகம்மாள், வெள்ளையம்மாள், லெட்சுமி, அழகு மற்றும் சித்ரா ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு மலைய கவுண்டர் பெயரில் பட்டா இருந்தது. மேற்படி பட்டாவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து மலையகவுண்டரின் பூர்வீக சொத்து ஆகும். மலையகவுண்டருக்கு உடன் பிறந்த சகோதரிகள் தற்போது உயிருடன் இல்லை. மலையகவுண்டர் உடன் பிறந்தவர்கள் 2 பெண்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியவில்லை. மலையகவுண்டர் மற்றும் அவரது உடன் பிறந்த சகோதரிகள் பூர்வீக சொத்துக்களை பாகம் பிரித்து கொள்ளவில்லை.

3. மலைய கவுண்டர் சகோதரிகளுக்கு வாரிசுகள் உள்ளார்களா என்று எனக்கு தெரியாது. மலையகவுண்டருக்கு பாகத்தின் மூலம் எந்தெந்த சொத்துக்கள் கிடைத்தது என்றால் 3 சர்வே எண்களில் ஏக்கர் 1.30 செண்ட் கிடைத்தது. அதற்கான எழுத்து மூலமான பத்திரங்கள் எதுவும் இல்லை. மலையகவுண்டர் ஆடு மாடுகள்

மற்றும் தானியங்கள் வாங்கி விற்பனை செய்தது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் எழுதிவைக்கவில்லை. மலையகவுண்டர் உடல்நிலை சரியில்லாமல் சுமார் 5 ஆண்டுகளாக படுக்கையில் இருந்து இறந்துவிட்டார்.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Principal District Munsif,**
**Kulithalai.**

அசல் வழக்கு எண். 115/2020 தேதி 02-02-2024

வா.சா.1- தங்கவேல்

<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். 2 முதல் 5 பிரதிவாதிகளை மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என தரப்பினராக சேர்த்துளளேன். என் தந்தை பிச்சைகாரனுக்கு ஆண்டியப்பன், பழனிசாமி, தங்கவேல் மற்றும் லெட்சுமாயி ஆகியோர் வாரிசுகள். தாவா சொத்து என் தந்தைக்கு பூர்வீக பாத்தியப்பட்டதாகும். எனது தந்தை உயிருடன் இருந்த போது சொத்துக்களை பாகம் பிரிக்கவில்லை. 30.05.2011 ம் தேதிய வா.சா.ஆ.1 பாக பத்திரத்தில் என் தந்தைக்கு பாகம் ஒதுக்கி எழுதவில்லை. மேற்படி பாக பத்திரத்தில் கண்ட ஏ பட்டியல் மற்றும் பி பட்டியல் சொத்துக்கள் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்று தெரியவில்லை. பி பட்டியல் சொத்தில் பழனிசாமிக்கு ஒதுக்கப்பட்டது. எனது தயார் லெட்சுமாயி 2020 ம் வருடம் இறந்த பிறகு பாக பத்திரம் வா.சா.ஆ. 2 ஏற்படுத்தினோம். எனது முதல் விசாரணையில் வா.சா.ஆ-1 ஆவணத்தில் உள்ள ஏ பட்டியல் சொத்தை வா.சா.ஆ-2 ஆவணத்தில் பி பட்டியல் சொத்தாக காண்பிக்கப்ட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்துக்களின் சர்வே எண் தெரியவில்லை.

(1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Principal District Munsif,**
**Kulithalai.**